அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல 02/2004.

எனது இல. தா9/3/98
அரசாங்க நிர்வாக,
உள்நாட்டலுவல்கள்
அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு – 07.

2004.06.15

அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்கள் மற்றும்
அரச கூட்டுத்தாபனங்கள்/நியதிச்சட்டசபைகள்/
அரச கம்பெனிகளின் தலைவர்களுக்கும்,

## 2001 டிசெம்பர் தொடக்கம் 2004 ஏப்பிறல் வரையிலான அரசியல் பழிவாங்கல்கள்

2001 டிசெம்பர் மாதம் தொடக்கம் 2004 ஏப்பிறல் வரையிலான காலப் பகுதிக்குள்ளான நியமனங்கள், பதவி உயர்வுகள் மற்றும் இடமாற்றங்கள் முதலிய அலுவல்களின் போது அரசியல் பழிவாங்கல்களுக்கு ஆளானவர்களின் முறைப்பாடுகளை பரிசீலனை செய்து அரசியல் பழிவாங்கல்களுக்கு ஆளானவர்களாக நிரூபணமாகின்றவர்களுக்கு சலுகையளிப்பதற்காக விதந்துரைப்பதற்கு ஒவ்வொரு அமைச்சு மட்டத்திலும் பிரதி அமைச்சர் அவர்களின் தலைமையில் அரசியல் பழிவாங்கல் புலனாய்வு குழுக்களை அமைக்க வேண்டுமென அமைச்சரவை கொள்கை ரீதியிலான விடயமாக தீர்மானித்துள்ளது.

02. இந்தக் குழுவுக்கு தொடர்புடைய அமைச்சுக்குப் பொறுப்பான அமைச்சர் அவர்களால் தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்கள் இருவர் உள்ளடங்க வேண்டும் என்பதுடன், அதில் ஒருவர் சட்டத்தரணியாதல் வேண்டும். தொடர்புடைய அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகள் மற்றும் அரச கம்பெனிகளில் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களால் சமர்ப்பிக்கப்படுகின்ற அரசியல் பழிவாங்கல் பற்றிய முறைப்பாடுகளை விசாரணை செய்து உரிய அமைச்சரிடம் விதப்புரைகளை முன்வைக்கும் பணி இக்குழுக்களைச் சார்ந்திருக்கும்.

03. அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் முறைப்பாட்டுக்கு அடிப்படையான குற்றச்சாட்டுகளையும், காரணங்களையும் குறிப்பிட்டு அதனை உறுதிப்படுத்துவதற்கு ஆதாரமாகக் கொள்ளும் ஆவணங்கள் இருந்தால் அவற்றுடன் எதிர்பார்க்கின்ற சலுகையை அல்லது தீர்வையும் குறிப்பிட்டு எழுத்திலான ஒரு முறைப்பாட்டை, மேன்முறையீட்டை ஒருமாத காலத்திற்குள் அரசியல் பழிவாங்கல் புலனாய்வு குழுவிடம் சமர்ப்பிக்குமாறு ஒரு அறிவித்தல் மூலம் அல்லது அமைச்சுச் சுற்றறிக்கை மூலம் தொடர்புடைய சேவையைச் சேர்ந்தவர்களுக்கு அறிவிக்க அரசியல் பழிவாங்கல் குழு நடவடிக்கை எடுக்க வேண்டும். முறைப்பாட்டுக்காரர் ஒருவர் சமர்ப்பிக்கக்கூடிய முறைப்பாட்டின்/விண்ணப்பத்தின் மாதிரியொன்று இணைப்பு I இல் உள்ளது. குழுவுக்கு கிடைக்கின்ற முறைப்பாடுகள்/மேன்முறையீடுகளை விசாரணை செய்து அரசியல் பழிவாங்கல் நேர்ந்துள்ளதாக குழு உறுதிப்படுத்தும் ஆட்கள் தொடர்பாக குழுவின் தீர்மானத்துடன் விதந்துரைக்கின்ற சலுகைகளையும், அதற்கான காரணங்களையும், அறிக்கைகளையும் பின்வரும் விடயங்களையும் கருத்திற் கொண்டு <u>மூன்று(03) மாத காலத்திற்குள்</u> தனது அமைச்சுக்குப் பொறுப்பான அமைச்சரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

(அ) <u>திணைக்களத் தலைவர்கள் தவிர்ந்த அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள திணைக்களங்களின் அரச அலுவலர்கள்.</u>

இவர்களின் நியமனங்கள், பதவி உயர்வுகள், இடமாற்றங்கள் மற்றும் ஒழுக்கக்கட்டுப்பாடு பற்றிய அதிகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவைச் சார்ந்துள்ளது. ஆகையால் அரசியல் பழிவாங்கலுக்கு ஆளானதாக உறுதிப்படுத்தப்படுகின்ற எவரேனுமொரு அலுவலருக்கு குழுவானது நியமனம், பதவி உயர்வு, இடமாற்றம், ஒழுக்கக் குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவித்தல் போன்ற சலுகையை விதந்துரைப்பதாயின் அத்தகைய விதப்புரைகளை அமைச்சரிடம் வேறாக சமர்ப்பிக்க வேண்டியதுடன், அமைச்சரவை அவ்வறிக்கைகளை உரிய நடவடிக்கையின் பொருட்டு கவனத்திற்கொண்டு பார்ப்பதற்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் முன்வைக்கலாம்.

அப்படி இல்லாது அரசியல் பழிவாங்கல் நேர்ந்துள்ளதாக நிரூபணமாகின்ற நபரொருவருக்கு நிதிசார் நஷ்டஈடு மட்டும் விதந்துரைக்கப்படுமாயின் அவ்விதப்புரையை வேறாக முன்வைக்க வேண்டும். அத்தகைய விதப்புரைகளை அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்காது அமைச்சரவை தகுந்த ஒரு முடிவை எடுக்கலாம்.

(ஆ) <u>திணைக்களத் தலைவர்கள்</u>

இவர்களின் நியமனங்கள், பதவி உயர்வுகள், இடமாற்றங்கள் ஒழுக்கக் கட்டுப்பாடு போன்ற அலுவல்கள் பற்றிய அதிகாரம் அமைச்சரவையைச் சார்ந்திருப்பதுடன், அமைச்சரவை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கருத்துரைகளை கலந்தாலோசித்த பின் அந்த அதிகாரங்களை செயற்படுத்தலாம். ஆகையால் இவர்களிடம் இருந்து கிடைக்கின்ற அரசியல் பழிவாங்கல் பற்றிய முறைப்பாடுகளையும்/மேன்முறையீடுகளையும் விசாரணை செய்து விதந்துரைக்கின்ற சலுகைகளைப் பற்றிய அறிக்கைகளை தமது விதப்புரைகளுடன் அமைச்சரவை பொருத்தமான முடிவுகளை எடுப்பதற்காக சமர்ப்பிக்கக் கூடிய வகையில் அமைச்சரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

(இ) <u>அரச கூட்டுத்தாபனங்கள்/நியதிச்சட்டசபைகள்/அரச கம்பெனிகளில் சேவையாற்றுபவர்கள்</u>

இந் நிறுவனங்களில் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களின் அரசியல் பழிவாங்கல்களுக்கு உரிய முறைப்பாடுகள்/மேன்முறையீடுகளை விசாரணை செய்து அரசியல் பழிவாங்கல் நேர்ந்துள்ளதாக நிரூபணமாகின்றவர்கள் தொடர்பில் விதந்துரைக்கின்ற சலுகை பற்றிய அறிக்கைகளை தமது விதப்புரைகளுடன் அமைச்சரவையின் கவனத்திற்கு சமர்ப்பிக்கக் கூடியதாக தொடர்புடைய அமைச்சரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அமைச்சரவையானது இவற்றை கருத்திற் கொண்டு பார்த்து அவசிய நடவடிக்கைக்காக தனது விதப்புரைகளை தொடர்புடைய நிறுவனங்களின் பணிப்பாளர் சபைகளிடம்/ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்க முடிவுசெய்யும்.

இலங்கை கடனீட்டுப் பத்திரங்கள் மற்றும் நாணயமாற்று ஆணைக்குழு அரச தொழில்முயற்சி சீர்திருத்த ஆணைக்குழு, இலங்கை தொலைத்தொடர்பு முன்னோடி ஆணைக்குழு போன்ற நிறுவனங்களுக்கும் இவ் விதிகள் உரியதாவதுடன், அத்தகைய அறிக்கைகளை தொடர்புடைய ஆணைக்குழுக்களிடம் சமர்ப்பிக்க வேண்டும். 17 ஆம் அரசியலமைப்பு சட்ட திருத்தத்தினால் திருத்தப்பட்ட 41(ஆ) சட்டத்தில் காட்டப்படுகின்ற அட்டவணையில் உள்ளடங்கும் ஆணைக்குழுக்கள் இதிலிருந்து அகற்றப்படுகின்றன.

(ஈ) <u>பொலீஸ் அலுவலர்கள்</u>

மேலே 3(ஆ) வின் கீழ் தெளிவுபடுத்தியவாறு பொலீஸ் அலுவலர்கள் தொடர்பில் உரிய குழு விதப்புரைகளை தேசிய பொலீஸ் ஆணைக்குழுவின் கவனத்திற்காக சமர்ப்பிக்க வேண்டும். இவ்விடத்து 17வது அரசியலமைப்புச் சட்டத்திருத்தத்தின் XVIII அ. அத்தியாயத்தின் ஏற்பாடுகள் உரியதாகும்.

மாற்றீடாக நிதிசார் நஷ்டஈடு மட்டும் செலுத்துமாறு செய்யப்படும் குழு விதப்புரைகளை தேசிய பொலீஸ் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்காது அமைச்சு உரியவாறு தீர்மானிக்கக் கூடியதாக வேறாக சமர்ப்பிக்க வேண்டும்.

04. அரசியல் பழிவாங்கல்களின் கீழ் அரசியல் காரணங்களின் பேரில் (அ) பதவி நீக்கம் செய்தல் (ஆ) பதவி உயர்வுகளை இழக்கச் செய்தல் (இ) பதவியிலிருந்து கீழ் இறக்குதல் (ஈ) இடமாற்றம் செய்தல் (உ) ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் (ஊ) தொழிலின் தரம், சிறப்புரிமை மற்றும் வசதிகளை கீழிறக்குதல் போன்ற விடயங்கள் உள்ளடங்குகின்றன. சேவை நிலையங்களுக்கு உட்பிரவேசிக்க விடாத ஊழியர்களுக்கு சலுகை வழங்குவதையும் குழு கவனத்திற் கொண்டு பார்க்க வேண்டும்.

05. அரசியல் பழிவாங்கல் நேர்ந்துள்ளதா என்பதை நிர்ணயிக்கும் போது குழுவானது பின்வரும் விடயங்களை கவனத்திற் கொள்ளலாம்.

(i) முறைப்பாட்டுக்காரர் சேவையாற்றி உள்ள வருடக் கணக்கு

(ii) முறைப்பாட்டுக்காரரின் சேவையின் தன்மை

(iii) பழிவாங்கலை நிரூபிப்பதற்காக சமர்ப்பித்துள்ள எழுத்துச் சாட்சியங்கள் உள்ளடங்கிய வேறு சாட்சியங்கள் எவ்வாறு ஏற்புடையதாக அமைகின்றது.

(iv) குறித்த பழிவாங்கலை நிரூபிக்க ஆதாரமாக்கிக் கொள்ளக்கூடிய எழுத்தாவணங்களை பெற முடியாதிருப்பின் அதற்கான காரணங்கள்.

(v) குறித்த பழிவாங்கலின் விளைவாக நேர்ந்துள்ள நிதிசார், தனிப்பட்ட நட்டங்கள்.

(vi) குறித்த பழிவாங்கலின் விளைவாக வேறு நபர் ஒருவருக்கு விசேடமாக கிடைத்துள்ள நிதிசார் தனிப்பட்ட சலுகைகள்.

06. மாகாண அரசாங்க சேவையைச் சேர்ந்த அலுவலர்கள் தொடர்பில் இச் சுற்றறிக்கை ஏற்புடையதாகாது. அவர்கள் தொடர்பில் ஆளுநர்கள் தகுந்த ஏற்பாடுகளை செய்வார்கள்.

ஒப்பம் / எஸ். சீ. மான்னப்பெரும
செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள்
அமைச்சு.

# விண்ணப்பப்பத்திரம்

## அரசியல் பழிவாங்கல் பற்றிய முறைப்பாடு

01. முறைப்பாட்டுக்காரரின் பெயர் :

02. முகவரி (அ) அலுவலகம் : தொலைபேசி இல:

(ஆ) தனிப்பட்ட : தொலைபேசி இல:

03. பிறந்த திகதி : வயது:

04. உங்களின் சேவை, பதவி மற்றும் காலம் (திகதிகளுடன்) :

05. (1) அரசியல் பழிவாங்கலின் தன்மை :

(எவ்வகையைச் சேர்ந்தது)

உதாரணம்:-

(அ) பதவி நீக்கம்
(ஆ) பதவி உயர்வை இழக்கச் செய்தல்
(இ) பதவியை கீழிறக்கல்
(ஈ) இடமாற்றம் செய்தல்
(உ) ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல்.
(ஊ) தொழலின் அந்தஸ்து சிறப்புரிமைகள், மற்றும் வசதிகளை கீழிறக்கல்

(11) முறைப்பாடு செய்யப்படும் அரசியல் பழிவாங்கல் மேற்கொள்ளப்பட்ட ஆண்டும் மாதமும்:

06. புரியப்பட்ட அநீதியை நிரூபிப்பதற்குரிய தகவல்களை சுருக்கமாக குறிப்பிடவும்.

07. மேற்குறிப்பிடப்பட்ட அரசியல் பழிவாங்கலை தெளிவுபடுத்திக்கொள்ள ஆதாரமாகக் கொண்ட ஆவணங்கள் யாவை?

08. மேலே 7 இல் குறிப்பிடப்பட்ட ஆவணங்களை சமர்ப்பிக்க முடியாதிருப்பின் அதற்கான காரணங்கள் யாவை?

09. இப்பழிவாங்கல் காரணமாக ஏதும் நிதிசார் அல்லது வேறுவிதமான நஷ்டம் ஏற்பட்டிருப்பின் சுருக்கமாக குறிப்பிடவும்.

10. 1 இது தொடர்பாக நீங்கள் இதற்கு முன் நீதிமன்றத்தில் ஏதேனும் நியாய சபையில் அல்லது பொதுமக்கள் மனு செயற்குழுவில் முறையிட்டுள்ளீர்களா?

11 விடை "ஆம்" என்றால் பின்வரும் தகவல்களை தருக.

1 நீதிமன்றத்தின் அல்லது நியாய சபையின் பெயர்:

11 முறையிட்ட திகதியும் முறைப்பாட்டு இலக்கமும்:

111 நீதிமன்ற, நியாயசபை அல்லது மக்கள் மனு செயற்குழுவின் தீர்மானமும் திகதியும்:

11. (அ) இது தொடர்பில் இதற்குமுன் நீங்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு/நிர்வாக மேன்முறையீட்டு நியாய அதிகார சபைக்கு மேன்முறையீடு செய்துள்ளீர்களா?

(ஆ) விடை "ஆம்" எனில் தீர்மானத்தின் தொடர் இலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடவும்.

12. நீங்கள் முறையிடும் இந்த அரசியல் பழிவாங்கல் தொடர்பாக கோரும் சலுகைகள் யாவை?

மேற்படி விடயங்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் சான்றுபடுத்துகிறேன்.

திகதி: விண்ணப்பதாரியின் கையொப்பம்.